# வவுனியா மாவட்ட உள்நாட்டு மீன்பிடி

**ரூபிதா, இ., விபுலன், பி.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rubirubitha1224@gmail.com

*புவி மேற்பரப்பில் காணப்படும் வளங்களில் மீன்வளமானது ஒரு புதுப்பிக்கக் கூடிய வளமாக உள்ளது. அதிகரித்து வரும் சனத்தொகையின் காரணமாக இம் மீன் வளத்துக்கான அதிகரித்த கேள்வியும் காணப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக உலக நாடுகள் மீன் வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் இலங்கையிலும் உள்நாட்டு நீர்நிலைகள் மற்றும் செயற்கையான நீர் நிலைகளில் மீன்குஞ்சுகளை வளர்த்து ஏனைய குளங்களில் வைப்பிலிடுகின்ற செயல்முறையினை மீன்பிடி மற்றும் நீரியல் வளர்ப்புத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் உள்நாட்டு மீன்பிடிக்கு வாய்ப்பாக அதிகளவான குளங்கள் காணப்படுகின்ற போதிலும் அவை பருவகாலக் குளங்களாகக் காணப்படுவதால் அனைத்துக் குளங்களிலும் நிரந்தரமாக மீன்பிடியில் ஈடுபட முடியாதுள்ளது. இங்கு பதிவு செய்யப்பட்ட ஒன்பது குளங்களில் மீன்பிடிச் சங்கங்கள் அமைக்கப்பட்டு மீன்பிடியானது இடம்பெற்று வருகின்றது. மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய ஒன்பது குளங்களைச் சேர்ந்த 658 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மீனவர்கள் உள்நாட்டு மீன்பிடி தொடர்பாக பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு வவுனியா மாவட்டத்தின் உள்நாட்டு மீன்பிடியின் தற்போதைய நிலையைக் கண்டறிதல், உள்நாட்டு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளப் படுத்துதல், உள்நாட்டு மீன்பிடியை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்மொழிதல், ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலைத் தரவுகளாக கள அவதானிப்பு, நேர்காணல், வினாக்கொத்து போன்ற முறைகளினூடாகத் திரட்டப்பட்ட தகவல்களும், இரண்டாம் நிலைத் தரவுகளாக இத்துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் திணைக்களங்களில் உள்ள அறிக்கைகள், மீனவ சங்க அறிக்கைகள், மீன்பிடி தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்கள், பத்திரிகை, இணையத்தளங்கள் என்பன மூலம் பெறப்பட்ட தரவுகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பெறப்பட்ட முடிவுகளானவை விபரணப் பகுப்பாய்வு மூலமாக விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வினூடாக உள்நாட்டு மீன்பிடியின் தற்போதைய நிலையை அறிய முடிந்ததுடன், மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சனைகளும் கண்டறியப்பட்டன. ஆய்வு முடிவாக ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் பெரும்பாலான மீனவர்கள் உள்நாட்டு மீன்பிடியையே தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பினும் அதனை விருத்தி செய்வதற்கான தொழில் நுட்பவியல் மாற்றங்களை அறிந்திருப்பது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. இதன் காரணமாக எதிர்பார்த்த அளவு உற்பத்தியைப் பெற்றுக்கொள்ள முடியாதமையினால் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி குன்றி காணப்படுகின்றமையானது கண்டறியப் பட்டது. இதனைக் கருத்திற்*